**கந்தேநுவர தமிழ் மகா வித்தியாலயம், மாத்தளை.**

# சைவநெறி

# தரம் 10

## மாணவர்களுக்கான பல்தேர்வு வினாத்தொகுதி

ஆக்கம் : G.சரவணராஜ் 0775245685

- **இப்பல்தேர்வு வினாத்தொகுதியில் 20 வினாக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.**
- **இப்பல்தேர்வு வினாத்தொகுதி இணையத்தளத்தில்** www.ktmvexam.blogspot.com **தரம் 10 இணைப்பில் சைவநெறி பாடத்தை தெரிவு செய்து, அதில் பின்வரும் பல்தேர்வு வினாத்தொகுதிக்கான விடையினை அளித்து தாங்கள் பெறும் புள்ளிகளை உடன் மதிப்பீடு செய்து கொள்ளலாம்.**

### ➲ பின்வரும் வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்க.

01. உலகில் உள்ள பொருள்கள் யாவற்றிலும் மேலான பொருளை குறிக்கும் தமிழ் பதம்.
1. கடவுள் 2. பரம்பொருள் 3. இறைவன் 4. தெய்வம்

02. “வேதமோடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல்…” என போற்றப்பட்டுள்ள நூல்
1. திருவாசகம் 2. தேவாரம் 3. திருமந்திரம் 4. திருக்கோவையார்

03. இறைவனின் ஐந்தொழில் அருளல் தொழிலை வடமொழியில் குறிக்கும் சொல்
1. திரோபவம் 2. திதி 3. அநுக்கிரகம் 4. சிருஷ்டி

04. குணங்கள் யாவற்றையும் கடந்தவர்” என்பதால் வழங்கப்படும் பெயர்.
1. குணாதீதர் 2. குணாதீ நாதர் 3. சச்சிதானந்தரூபி 3. நிர்விகாரி

05. “தவம்” செய்தலுக்கு நிகரானதாக போற்றப்படுவது
1. இன்மொழி பேசுதல் 2. அதர்மம் செய்தல் 3. அன்பு செய்தல் 4. வாய்மை உரைத்தல்

06. “ உள்ளத்து உணர்ச்சியிற் கொள்ளவும் படான்” என்றுரைத்தவரும், உரிய நூலும்
1. மாணிக்கவாசகர், தேவாரம் 2. சுந்தரர், திருவாசகம்
3. திருவாதவூரர், திருவிசைப்பா 4. மணிவாசகர், திருவாசகம்

07. ஆன்மாவின் மும்மல வலிகெடுத்தலினால் ஆன்மாவுக்கு கிடைப்பது
1. மறுபிறவி 2. ஆன்ம விடுதலை 3. மலபந்தம் 4. மீள்பிறவி

08. இந்து மரபில் நிழல் கிரகங்களாக விளங்குபவை.
1. ராகு, சந்திரன் 2. கேது, சூரியன் 3. ராகு, கேது 4. குரு, புதன்

09. பௌர்ணமி நட்சத்திரத்துடன் சேர்ந்திருப்பதை கொண்டு மாதங்களை கணிக்கும் முறை
1. சௌரமான முறை 2. சூரியமான முறை 3. அமாந்த முறை 4. பூர்ணிமாந்த முறை

10. அமாவாசையை அடுத்து வரும் நான்காம் நாள் அழைக்கப்படும் முறை
1. வளர்பிறை ஸப்தமி 2. தேய்பிறை ஸப்தமி
3. கிருஸ்ணபட்ச சதுர்த்தி 4. சுக்கிலபட்ச சதுர்த்தி

11. நரக சதுர்த்தசி என அழைக்கப்படும் பண்டிகை
    1. தைப்பொங்கல்
    2. தீபாவளி
    3. சித்திரைப் புத்தாண்டு
    4. ஓணம் பண்டிகை

12. மிருகேந்திரம் முதல் விசிவான்மிகம் வரையிலான உபாகமங்களிதும் எண்ணிக்கை
    1. 210
    2. 205
    3. 207
    4. 200

13. மார்கழி மாத வளர்பிறையில் சஷ்டி வரையில் 21 நாட்கள் அனுட்டிக்கும் விரதம்.
    1. கேதாரகௌரி விரதம்
    2. விநாயகர் சஷ்டி
    3. கந்தசஷ்டி
    4. மார்கழி திருவாதிரை

14. இறைவன் உவக்கும் இன்மலர்களில் கூப்பியகைக் காந்தன் ஒன்றும் எனப் போற்றுபவர்
    1. இராமகிருஸ்ண பரமஹம்சர்
    2. சுவாமி விவேகானந்தர்
    3. சுவாமி விபுலானந்தர்
    4. ஆறுமுகநாவலர்

15. யாகங்களின் போது இடம்பெறும் சடங்கு முறைகளை விளக்குவன.
    1. மந்திரம்
    2. பிராமணம்
    3. ஆரணியகங்கள்
    4. உபநிடதங்கள்

16. “அங்கமும் வேதமும் ஓது நாவர் ……” எனும் திருமுறைப் பாடலின் பண்
    1. நட்டபாடை
    2. குறிஞ்சி
    3. பழம்பஞ்சுரம்
    4. செந்துருத்தி

17. நடராஜ திருக்கோலத்தின் சிறப்பினை வியந்து போற்றுகின்ற திருமுறைப்பாடலின் முதவடி
    1. அங்கமும் வேதமும் ஓதும் நாவர்….
    2. அந்தநாளன் உன் அடைக்கலம் புகுத…..
    3. உற்றுமை சேர்வது மெய்யினையே……
    4. குனித்த புருவமும் கொவ்வைச் …

18. சூரியனை முழுமுதற் கடவுளாக கொண்டு போற்றும சமயநெறி
    1. சைவம்
    2. சாக்தம்
    3. சௌரம்
    4. கௌமாரம்

19. திருத்தொண்டர் புராணம் என அழைக்கப்படும் புராணம்
    1. திருத்தொண்டர்தொகை
    2. பெரியபுராணம்
    3. கந்தபுராணம்
    4. கருடபுராணம்

20. தாமரை மலர் மீது வாழும் இந்திரன், பிரம்மன் முதலான தேவர்கள் நிறைந்திருக்கும் மண்டபம்
    1. மகா மண்டபம்
    2. அர்த்தநாரீஸ்வரர் மண்டபம்
    3. திருச்சிற்றம்பல மேடை
    4. தேவாசிரியன் மண்டபம்

**இப்பல்தேர்வு வினாத்தொகுதியை www.ktmvexam.blogspot.com எனும் இணையதளத்தில் செய்து, தமது புள்ளிகளை மதிப்பீடு செய்து கொள்ளலாம்.**